# தமிழ் முரசு

தமிழீழம் தவிர்க்கமுடியாதது

# TAMOUL MOURASSOU

முரசு 2
ஒலி 5
பங்குனி
1984




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு-29

## இன்று பெய்ரூத்; நாளை திருமலை!

அமெரிக்கப் பாதுகாப்பமைச்சரின் இலங்கை விஜயம், அதைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதியின் விசேட தூதுவரின் இலங்கை விஜயம்..... திருமலையில் எண்ணெய்க் குதங்கள் அமெரிக்காவின் பாவனைக்கு.... புத்தளத்தில் அமெரிக்க வானொலிச் சேவைக்கு நில ஒதுக்கீடு..... என்றெல்லாம் செய்திகள் வந்தபோது எம்மில் பலர் இவற்றை வெறும் காற்றில் வந்த செய்திகளாக அலட்சியப்படுத்தினோம். இந்தச் செய்திகளை மாத்திரமா நாம் அலட்சியப்படுத்தினோம்? காலா காலமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நாசகாரங்கள் பட்டுச் சிதறிய தேசங்களின், சிந்திய இரத்தங்களின் வரலாறுகளையுமல்லவா நாம் அலட்சியம் செய்தோம்.

அந்த அலட்சியம் இன்று எமது கழுத்துக்கு நேரே கத்தியைக் கொண்டுவந்துவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியம் என்னும் வெறிநாயின் விஷப் பார்வையை திருமலையில் விழச் செய்ததுடன் மாத்திரமல்ல அந்த நாசகாரங்கள் நமது பெருநகரில் படர ஆரம்பித்தும் விட்டது. பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அடித்து விரட்டப்படும் நிலைக்கு வந்துவிட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்து சமுத்திரத்தில் தனது வெறியாட்டத்தை தொடர்வதற்கு திருகோணமலைத் தளம் இன்றியமையாதது எனத் தீர்மானித்து விட்டது.

இதன் விளைவுகளை சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதி சிறிலங்காவின் இனவாத அரசுக்கு வழங்கிய நற்சாட்சிப்பத்திரம், சிறிலங்கா அரசுக்கு வழங்க இருக்கும் 7 கோடியே 30 இலட்சம் டாலர் நிதியுதவி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இதற்கு எதிர்ப்புக் காட்ட முயலும் தமிழ் மக்களை அழிப்பதற்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான நவீனரக ஆயுதங்கள், சிறிலங்கா இராணுவத்திற்கு விசேட பயிற்சி, கடற்படைக்கு விசேட பயிற்சி அனைத்துக்கும் மேலாக கூட்டணி செயலதிபர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தை விருந்து வாங்கி திருமலையை தாரைவார்த்து ஒரு பேச்சுவார்த்தை நாடகம் .... ஆகியனவாகும்.

இன்னும் நாம்... குறிப்பாக மக்களை விடுதலைப் போராட்டத்திற்கு அணிதிரட்ட முயலும் விடுதலை இயக்கங்கள் ஏகாதிபத்தியத்தின் இந்தச் சதிகளை அலட்சியம் செய்து பேதங்களையும், பிளவுகளையும் பெரிதாக எண்ணி இயங்க முனைந்தால்... ஏகாதிபத்தியத்திற்கும் அதன் எடுபிடியான சிறிலங்கா அரசுக்கும் எதிராக கிளர்ந்தெழுவதற்கு மக்களை அணிதிரட்டாமல் வெறுமனே தாக்கி ஓடும் நடவடிக்கைகளையே தொடர்ந்தால் திருமலை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நாசகரங்களில் சிக்குவதும், எமது மக்களின் குரல்வளைகள் நெரிக்கப்பட்டு, எமது பூமி இரத்தக்கறை படிவதும் தடுக்க முடியாததாகிவிடும்.

இதற்கு இன்று எம் கண்முன்னே நடக்கும் பெய்ரூத்தின் காட்சிகளே சாட்சி. எப்படி இன்று அங்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கடற்படை தனது கைப்பொம்மையான லெபனான் ஜனாதிபதியைக் காப்பாற்றுவதற்காக குண்டுகளைச் சுட்டுத் தள்ளி ஆயிரக்கணக்கான பெண்கள், குழந்தைகள், வயோதிபர்களைக் கொன்றழித்து, குருதியைச் சிந்தச் செய்கின்றதோ, அதையே நாளை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏழாவது கடற்படை தனது கைப்பொம்மையான ஜெயவர்த்தனவைக் காப்பாற்ற குண்டுகளைச் சுட்டுத் தள்ளி எம் மக்களைக் கொன்றழிக்கும். எனவே வேறுபாடுகளை மறந்து ஆதிக்கத்துக்கு எதிராக நாம் கிளர்ந்தெழுவோம். அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமில் படித்த மறந்த பாடத்தை தமிழ் ஈழ மக்கள் நாம் மீண்டும் படிப்பிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையும் தமிழ் மக்களுக்கு எதிரா...?

இனவாத அரசின் கொடுமைகளுக்கு உள்ளாகி அல்லல்பட்டு வந்த ஈழத்தமிழினத்திற்கு இப்போது இயற்கையும் எதிரியாக மாறியுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெய்த அடை மழையும் வெள்ளமும் ஏறத்தாழ 90 ஆயிரம் பேரை அகதிகளாக்கியுள்ளது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, வவுனியா, கல்முனை, அம்பாறை, பொத்துவில் உட்பட பல பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதுடன் பலர் தமது வீடுகளையும் இழந்துள்ளனர். பல இடங்களில் மக்கள் பாடசாலைகளில் தங்கியுள்ளனர். இவ்வெள்ளம் ஏராளமான பயிர்களையும் நாசமாக்கியுள்ளது. மேற்படி பாதிக்கப்பட்டவர்களின் இல்லங்களைச் சீரமைத்து அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் பணியில் யாழ், மட்டுநகர் பல்கலைக் கழக மாணவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். வெள்ளம் காரணமாக போக்குவரத்துக்களும், தகவல் சேவைகளும் சீர்குலைந்துள்ளன.

## சர்வகட்சி மாநாட்டிலிருந்து சுதந்திரக்கட்சி விலகியது!

தமிழ் மக்களின் விடுதலையைப் பின்னடிக்கும் நோக்குடன் முகமூடியணிந்த அரசியல்வாதிகளின் மேடை நாடகமான சர்வகட்சி மாநாட்டிலிருந்து இனவாத ஐ.தே.கவுக்கு சற்றும் குறையாத இனவாதத் தன்மை வாய்ந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி மேற்படி மாநாட்டிலிருந்து விலகியுள்ளது. மாநாட்டில் நடக்கும் விடயங்கள் பற்றி கூட்டணியினர் இந்தியாவில் விமர்சனம் செய்திருப்பதும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் தலைதூக்கியுள்ள பயங்கரவாதத்தை அரசினரோ, கூட்டணியினராலோ கட்டுப்படுத்த முடியாதிருப்பதாலும் தாம் மேற்படி மாநாட்டிலிருந்து விலகிக்கொள்வதாக சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது. இதையடுத்து திரு. அமிர்தலிங்கம் சு.க. தலைவி சிறிமாவோவை சந்தித்து உரையாடியுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மருத்துவ பீட மாணவன் இராணுவத்தினரால் கைது! மாணவர்கள் ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம்!

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட முதலாம் வருட மாணவரான வயாவிளானைச் சேர்ந்த எல். எவன் 16.2.84 அன்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து அவரை உடனே விடுதலை செய்யுமாறு கோரி பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்கள் 20.2.84 காலை ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நிகழ்த்தினர். ஏனைய பீடங்களைச் சேர்ந்த 2500 பேரும் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து இவ்வார்ப்பாட்ட ஊர்வலத்துக்கு ஆதரவளித்தனர்.

அதே வேளையில் பேராதனை தும்பறைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மாணவர்களாகிய - நாகேஸ்வரன் (மாங்குளம்), ஜே. தேவலிங்கம் (முல்லைத்தீவு), ஆர். தங்கேஸ்வரன் (ஒட்டுசுட்டான்), வேல் மோகன் (கல்முனை), பகீரதன் (மட்டக்களப்பு), ஞானபண்டிதன் (மாங்குளம்) ஆகியோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதைக் கண்டித்துள்ள பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் ஒன்றியம் அவர்களை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

## ஐ. தே. க. ஆதரவாளர் ஆருக்கும் இதுதான் கதி!

ஐ.தே.க.வின் தீவிர ஆதரவாளரும், ஜனாதிபதித் தேர்தலிலும், சர்வஜன வாக்கெடுப்பிலும் ஐ.தே.க.விற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தவருமான நிலாவெளி தமிழ் வித்தியாலய அதிபர் செல்வநாயகம் என்பவரை 11.12.83 அன்று பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகவும் அவர் இதுவரை எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை என்றும் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு கோரியும் ஆட்கொணர்வு மனுவொன்று அவரது தந்தையினால் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசபயங்கரவாதத்திலிருந்து ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்குக் கூட மீட்சி இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிலங்கை சென்ற மாணவர்கள் மீண்டும் திரும்பினர்.

மகா இலுப்பள்ளம விவசாயப் பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவான வடபகுதியைச் சேர்ந்த 5 தமிழ் மாணவர்கள் பேரினவாத மாணவர்கூட்டத்தால் விரட்டப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டுள்ளார்கள். இதுபோல பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியற் பீடத்துக்குத் தெரிவாகி அங்கு சென்ற 4 தமிழ் மாணவர்களும் இது போன்ற பேரினவாதிகளின் விரட்டல்கள் காரணமாக மீண்டும் தமிழீழத்துக்கே திரும்பிவிட்டனர்.

## சிறீலங்காவுக்கு ஆயுதம் வழங்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிதி ஒதுக்கீட்டுக் குழுவின் தலைவர் ஜோசப் அடாபோ சிறீலங்கா அமைச்சர்களுடனும், ஜனாதிபதியுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இலங்கையில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பது என்ற போர்வையில் சிறீலங்கா இராணுவத்தைக் கட்டி எழுப்ப 3.5 இலட்சம் டாலர்களை கொடுத்துதவ அமெரிக்கக் காங்கிரசுக்கு தாம் சிபாரிசு செய்வதாக அவர் கூறியுள்ளார். இது தவிர சிறீலங்கா கடற்படைக்கு இராணுவப் பாணி தளக்கப்பல் ஒன்றையும் நவீன பயிற்சி வசதிகளை அளிக்கவும் தாம் சிபாரிசு செய்வதாக அவர் கூறியுள்ளார். இலங்கையில் இல்லாத ஜனநாயகத்தை பாதுகாக்க அமெரிக்கா கூறி ஆயுதங்களை வழங்குவது ஈழவிடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கான அப்பட்டமான சதியேயாகும்.

## பள்ளிவாசலிலும் படையினர் வெறியாட்டம்.

29.1.84 அன்று திருமலையிலுள்ள இஸ்லாமியப் பள்ளிவாசலுக்குள் புகுந்த சிறீலங்கா இராணுவத்தினர் வெறியாட்டம் ஆடியுள்ளனர். மேற்படி பள்ளிவாசல் கதவு, யன்னல்களையும், தளபாடங்களையும் சேதப்படுத்திய இராணுவத்தினர் அப்பாவி பொதுமக்கள் இருவரையும் காயப்படுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கானை மக்கள் வங்கியில் இளைஞர்களின் துணிகரக் கொள்ளை!

13.2.84 இரவு 10.30 மணியளவில் சங்கானை மக்கள் வங்கியிலிருந்த 50 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த தங்க நகைகள் அவை வைக்கப்பட்டிருந்த கனரக இரும்புப் பெட்டியையும் காக்கி உடையிலும், சாதாரண உடையிலும் வந்த 25 வாலிபர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இயந்திரத் துப்பாக்கிகளை ஏந்தியிருந்த இந்த இளைஞர்கள் வங்கிக்கு வெளியே இரும்புப் பெட்டியை இழுத்துவந்து வாகனத்தில் ஏற்றுவதற்கு வங்கிக்குப் பக்கத்திலிருந்த நெசவு நிலையப் பாதுகாவல் 4 ஊழியரைப் பயன்படுத்தியுள்ளனர். மிகுந்த துணிச்சலுடன் மேற்கொள்ளப்பட்ட இக்கொள்ளை சிறீலங்கா அரசுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இதை ஒத்த இன்னுமொரு கொள்ளை கிண்ணியாவில் நடந்துள்ளதாகவும் 1 கோடி 50 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த, பணம், நகை இதில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. ஜனவரி மாதம் நடைபெற்ற காத்தான்குடி வங்கிக் கொள்ளை மற்றும் மேற்குறிப்பிட்ட இருவங்கிக் கொள்ளைகள் ஆகியன குறிப்பிட்ட ஒரே வேளையிலேயே நிகழ்த்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. வழமைபோல சிறீலங்கா பொலிசாரால் தகவல் எதையும் பெறமுடியவில்லை.

## கூட்டணிப் பிரமுகர்கள் யாழ். விஜயம்.

தமிழ் மக்களின் ஏகபோகப் பிரதிநிதிகள் தாமே என்று மார்தட்டி விட்டு தமிழ்மக்களுக்கு ஆபத்து வந்ததுடன் தாம் மாத்திரம் தப்பினால் போதுமென்று இந்தியாவுக்குத் தப்பி ஓடி அங்கு தமிழ் நாட்டின் 'குரு குரு' விடுதிகளில் இதுவரைகாலமும் தஞ்சம் புகுந்திருந்த முன்னாள் கூட்டணி பா.உ.க்கள் பேச்சுவார்த்தைச் சாட்டில் தாம் கொழும்பு மேற்கொண்ட விஜயங்களை இப்போது யாழ்ப்பாணம் வரை நீடித்துள்ளார்கள். அமிர்தலிங்கம் உட்பட பல பிரமுகர்கள் யாழ்ப்பாணத்திற்கு சென்றுள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநகர் இராணுவ முகாமுக்கு தீ வைப்பு!

ஸ்ரீலங்கா அரசபடைகளின் வதை முகாம்களில் பிரசித்தி பெற்றிருந்த குருநகர் இராணுவ முகாம் சமீபத்திய கலவரங்களை அடுத்து மூடப்பட்டிருந்தது தெரிந்ததே. தற்போது மீண்டும் மேற்படி இராணுவ முகாமை திறப்பதற்கான வேலைகளை ஆக்கிரமிப்பு அரசு செய்து வந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக தீவிரவாத இளைஞர்கள் மேற்படி முகாமுக்குத் தீ மூட்டி பெரும் பகுதியை 24.2.84 சனி இரவு நாசப்படுத்தினர். இதற்கு எதிராக அரச படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 17 வயதுடைய இளம் பெண் கொல்லப்பட்டார். அவரது தாய், தகப்பன் இருவரும் காயமடைந்துள்ளனர்.

## இலங்கை மக்களின் வயிற்றில் மேலும் ஒரு அடி!

வருமானத்தில் பெரும் பகுதியையும் வாங்கும் கடனில் பெரும்பகுதியையும் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கான ஆயுதக் குவிப்பில் ஈடுபடுத்தும் ஸ்ரீலங்கா அரசு ஏற்கனவே மக்களின் தலையில் தாங்கமுடியாத வரிச் சுமைகளை திணித்திருப்பது தெரிந்ததே. ஏற்கனவே அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுகளால் பாதிக்கும் மக்களின் வயிறுகளில் கோதுமை மாவின் விலையை கிலோவை ஒரு ரூபாவால் அதிகரித்து அடி கொடுத்திருக்கிறது. இதன் காரணமாக உணவுப் பொருட்கள் அனைத்தினதும் விலைகள் அதிகரித்திருக்கின்றன.

## கொள்ளை முயற்சியில் 4 புத்தபிக்குகள் கைது!

கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்வண்டியொன்று வழி மறிக்கப்பட்டு மேற்படி பஸ்ஸிலிருந்த பிரயாணிகளிடமிருந்து 1 லட்சத்து 72 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது. இது தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்கள் யார் தெரியுமா...? மாத்தறை, காலி, திக்கவல, ஹபரனை ஆகிய ஊர்களிலுள்ள விகாரைகளின் தலைமைப் பிக்குகளாகும். இவர்களிடமிருந்து 104 காதல் கடிதங்கள், புலிகளின் படங்கள், துப்பாக்கிகள் இதர ஆயுதங்கள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிசத் தமிழ் ஈழத்தின் உதயம் தடுக்க முடியாதது!

இற்றைக்கு 136 வருடங்களுக்கு முன்பு கம்யூனிஸ்ட்டுக் கட்சி, கார்ல்மாக்ஸ், ஏங்கல்சால் எழுதப்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கை என்ற வடிவில் தனது வேலைத்திட்டத்தை உலகுக்கு வெளியிட்டது. அந்தக் காலங்களில்கூட கம்யூனிசம் உலக அரசியல் வானுள் நுழைவதற்கு கஷ்டப்பட்டது. முதலாளித்துவத்தின் பொய்களிலும், வஞ்சனைகளிலும் அடக்குமுறை ஒடுக்குமுறைகளிலும் திட்டமிட்டும், தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டது. இருந்த போதிலும் அது தடுக்கமுடியாதபடி தளைத்து வேரூன்றிப் படர்ந்ததனால் இன்று அது தமிழீழத்தை வந்தடைந்து விட்டது. இன்று தமிழீழத்தில் உள்ள இளைஞர் இயக்கங்களையும் கம்யூனிசம் பற்றிப் பிடிக்கத் தொடங்கி விட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலங்களில் ஜேர்மனியில் என்ன வேகத்தில் இந்தப் பிடிப்பு பரவியதோ, அதையும் விஞ்சிய வேகத்தில் தமிழீழத்தில் இன்று கம்யூனிசம் பரவுகிறது.

இது எவ்வாறு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளான வானொலி, தொலைக்காட்சி, மின்சாரம் போன்றவை ஐரோப்பாவுக்கு பாவனைக்கு வந்து பல தசாப்தங்களின் பின் இலங்கையை வந்தடைந்ததோ அதே போன்றே மார்க்சியத் தத்துவமும் காலங்கடந்து தமிழீழத்துக்கு வந்தாலும் அதைப் பாவனைக்கு எடுப்போரின் வேகம் நினைத்துப் பார்க்க முடியாதபடி இருக்கிறது. அதற்குரிய ஒரே காரணம் மின்சாரம், வானொலி, தொலைக்காட்சி போன்றவை வளமான வாழ்வு பெற்றோரால் மட்டும் பாவனைக்கு எடுக்கப்படும் மாறாக மார்க்சியம் வளமான வாழ்வை இளமையிலேயே பறிகொடுத்தவர்களால் மாத்திரம் பாவனைக்கு எடுக்கப்படும். இன்றைய தமிழ் இளைஞர்கள் சோசலிசத் தமிழ் ஈழம் என்று உறுதியாகக் கூறுவதற்குரிய காரணம் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழத்திலே மார்க்சியத்தின் கடைப்பிடிப்பு எந்த வேகத்திலே பரவுகிறது என்பதை அரசியல் அப்பாவிகள் சட்டை செய்யாது விடக்கூடும் . ஆனால் மார்க்சிய வரலாற்றோடு பரிச்சயமானவர்களுக்குத் தெரியும் அது என்ன வேகத்திலே பரவுகிறது என்று . இன்று தமிழீழத்திலே பத்துக்கு மேற்பட்ட மார்க்சியக் கருத்துக்களை தாங்கி வரும் ஏடுகள் வெளிவரத் தொடங்கி விட்டன . இங்கு இன்று தோன்றியுள்ள விடுதலை இயக்கங்களும், பத்திரிகைகளும் சில குறைபாடுகளைக் கொண்டவைகளாக இருந்த போதிலும் அந்தக் குறைபாடுகளை அவர்கள் வருகின்ற போராட்ட அலைகளிலே உதிர்த்து விடுவர் . உலகில் தோன்றியுள்ள எல்லா மார்க்சிய இயக்கங்களுமே அவைகளின் இளமைப் பருவங்களில் இப்பேர்ப்பட்ட குறைபாடுகளைக் கொண்டவைகளாகத் தோன்றியே முதிர்ச்சியும் பக்குவமும் அடைந்தன .

ஆனால் இன்றைய தமிழீழ விடுதலை இயக்கங்கள் மற்றைய மார்க்சிய இயக்கங்களில் இருந்து ஒருவிதத்தில் வேறுபட்டன அவை தமிழர் விடுதலைக் கூட்டணியோடு சேர்ந்து இலங்கையில் உள்ள இடதுசாரிகளை 'வாய்மூடச் செய்து விட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பழைய இரத்தத்தை அகற்றி விட்டு அதற்கு புதிய புரட்சிகர இரத்தத்தை ஏற்ற முற்பட்ட போது , சமாதானமும் இல்லை போராட்டமும் இல்லை என்ற நடுக்கடலில் தத்தளித்தபோது - சோசலிசத் தமிழீழத்தை நோக்கி நீச்சலடிப்பதுதான் உயிர் தப்புவதற்கான மார்க்கமென கண்டு கொண்டனர் .

தமிழர் விடுதலைக் கூட்டணியோ அன்றி அதன் தாய்க் கட்சிகளோ தென்னிலங்கை அரசாங்கங்கள் தமிழ் மக்களை ஒடுக்குவதையும் , அவற்றின் இனவாதச் செயற்பாடுகளின் விளைவுகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டன விமர்சனம் செய்தது உண்மைதான். ஆனால் அவைகளால் அவ ற்றிற்கு விளக்கம் கூற முடியவில்லை. ஆகவே வலிமை பெற முடிய வில்லை. ஐ.தே.க வை, சுதந்திரக் கட்சி— சமசமாஜக் கட்சி கம்யூனிஸ்டுக் கட்சியின் கூட்டு முன்னணியைத் தீயவை என்பதாய் நிரா கரிக்க மட்டுமே அவைகளால் முடிந்தது. தமிழ் மக்கள் ஒடுக்கப்ப டுவதை, வஞ்சிக்கப்படுவதை முதலளித்துவத்தில் தவிர்க்க முடியாத தாய் இருக்கும் இவைகளை எவ்வளவுக்கு எவ்வளவு கடுமையாகக் கண்டித்து இவை சாடினவோ அவ்வளவுக்கவ்வளவு குறைவாகவே இவ் வகையான ஒடுக்குமுறை, வஞ்சகம், பாரபட்சம், சுரண்டல் ஆகி யன எதில் அடங்கியிருந்தன, இது எப்படி ஆரம்பமாயிற்று என்பதை தெளிவுபடக் காட்ட முடிந்தது.

இதைச் செய்வதற்கு தேவையாக இருந்தது என் னவென்றால் இலங்கையிலே முதலாளித்துவம் இருக்கிறதென்று அங்கீக ரிக்க வேண்டும். சிங்கள மொழிப் பிரச்சனையில் தொடங்கி இந் தப் பிரச்சனைகளின் தோற்றம், வளர்ச்சி, உருமாற்றம், முட்டி மோதல்களை ஆய்வு செய்யவோ விளக்கவோ முடியாது. இதனை ஏங்கல்ஸ் தனது 'டூரிங்கிற்கு மறுப்பு' என்ற நூலில் ". பேசிடும் இந்த சமூகங்கள் எப்பொழுதுமே பொருளுற்பத்தி, பரிவர்த்தனை, முறைகளின் விளைவாய் உருவாகின்றவை சுருங்கக் கூறுமிடத்து அவற் றின் காலத்திய பொருளாதார நிலைமைகளின் விளைவாய் உருவா கின்றவை என்பது புலனாகின்றது. சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்புத்தான் சமுதாயத்தின் முன்னேற்றம், அமைதி பிரச்சனை களுக்கான மெய்யான அடித்தளமாக எப்பொழுதும் அமைகிறது. இதி லிருந்து தொடங்கினால்தான் வரலாற்றின் அந்தந்தக் காலக் கூறுகளு க்குரிய நீதி நெறி, அரசியல் நிறுவனங்கள் மற்றும் சமயக் கருத்து க்கள், தத்துவவியற் கருத்துக்கள், வர்க்க பேதம், இன பேதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பிற கருத்துக்களுமாகிய மேற்கட்டுமானம் அனைத்திற்கும் நாம் முடிவான விளக்கம் காணமுடியும்...." எனக் குறிப்பிடுகிறார்.

இலங்கை அரசியலிலே சிங்களம், தமிழ் என்பவையே எல்லாப் பிரச்சனைகட்கும் தாய் என்றொரு காலம் இருந்தது தான். தென்னிலங்கையில் உள்ள ஜனநாயக மேலுறை அணிந்த இனவாதிகளும், சோசலிச மேலுறை அணிந்த இனவாதிகளும் தமிழ் இனவிரோத அணை கட்டி சோசலிசப் புரட்சியைத் திசை திருப்பினர். இதன் பிரதிவிளைவாக இலங்கையில் உள்ள தமிழ் மக்களை மாத்திரம் ஒருமுகப் படுத்தியது மாத்திரமல்லாது தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களையும் இதற்கு பக்கபலமாக்கி விட்டார்கள். இன்று இலங்கையிலே சோசலிசப் புரட்சியை விட தமிழீழப் போராட்டம் உக்கிரமாகி விட்டது. சில வரலாற்றுக் கால கட்டத்திலே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சில இடங்களிலே நடைபெறும் தேசிய விடுதலைப் போராட்டமானது சோசலிசப் புரட்சியை விட முக்கியமானதாகி விடுகிறது. அது ஏகாதிபதித்தியத்தை பாரிய மட்டத்தில் பலவீனமாக்கி விடுவதோடு உலகப் புரட்சியை விரைவு படுத்துகிறது

முன்பு தென்னிலங்கையிலிருந்து புரட்சிகரச் சிந்தனை தமிழீழத்துக்கு ஏற்றுமதியாகியது. இன்று மாறாக தமிழீழத்திலிருந்து புரட்சி தென்னிலங்கைக்குப் பரவுகின்ற நிலை வந்துள்ளது. முன்னைய தமிழர் தலைமைகள் தென்னிலங்கையில் உள்ள மார்க்சியத் தலைமைகளை தோற்கடித்து முதலாளித்துவ அரசாங்கங்களைக் காப்பாற்றும் விதத்திலேயே தொடர்ந்து செயற்பட்டன. ஒவ்வொரு விலைவாசி ஏற்றம், சமூக சேவை வெட்டுக்களுக் கெதிரான தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்கள் பாராளுமன்ற விவாத ஜால வித்தைகளால் இன வாதமாக மாற்றப்பட்டன. இன்று தமிழர் கூட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனியோ அமிர்தலிங்கமோ இல்லாமல் ஐ.தே.க ஒரு கையால் தட்டி ஓசை எழுப்ப வேண்டியுள்ளது. அது மாத்திரமல்ல இன்று சின்ன சின்ன இனக் குரோத வசனங்களால் தமிழ் மக்களை அத்திரமூட்டவோ உணர்ச்சி வசப்படுத்தவோ முடியாத நிலை உருவாகி விட்டது. மாத்திரமல்ல தோன்றியுள்ள அரசியல் அநுபவத்திலே இளமையான விடுதலை இயக்கங்கள் ஐ.தே.க வை பலவீனமாக்க வேண்டிய வழிகளை ஆரம்ப கட்டத்திலே அறிவித்து விட்டதுடன் நாம் எல்லோரும் மார்க்சிய வாதிகள் என்று தயக்கமின்றி கூறி விட்டன.

இதைக் கண்ணுற்ற முதலாளித்துவம் மீண்டும் தமிழ் மக்களோடு சமரசத்துக்கு வருவதால் மாத்திரமே முதலாளித்துவத்தைக் காப்பாற்றலாம் என்பதைக் கண்டுவிட்டது. இதன் வெளிப்பாட்டை டிசம்பர் 10ம் திகதி ஐ.தே.க வின் வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் பேச்சு வெளிப்படுத்துகிறது '... நான் ஒரு தலைவனே ஒழிய துரோகி அல்ல நான் முழுத் தமிழர்களையும் என்னுடைய ஆயுதப் படைகளின் மூலம் கொல்ல முடியும். ஆனால் நான் அப்படிச் செய்ய மாட்டேன் ....". "...இந்த நாட்டின் தமிழ் மக்களுக்காக பேசுகின்ற முழு உரிமையும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு கிடையாது. தமிழ் பேசும் மக்களுக்காக பேசுகின்ற உரிமை எனக்குண்டு, ஏனெனில் அவர்களில் பெரும்பான்மையோர் ஐ.தே.வுக்கே கடந்த தேர்தலில் வாக்களித்தனர். சிறுபான்மையினரான தமிழ் மக்கள் உலகிலுள்ள சிறுபான்மை இனங்களிலே சக்தி வாய்ந்த இனம் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்."

இதை ஜெயவர்த்தனா வாய் தவறியோ அல்லது இயற்றியோ சொல்லவில்லை. ஜெயவர்த்தன முதலாம் யுத்த காலம் முதற் கொண்டு இன்று வரையும் எதிர்ப்புரட்சி அநுபவங்களை, 'தன்னகத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கும் வயோதிப முதலையாகும். ஜெயவர்த்தனாவிற்கு நன்றாகத் தெரியும் தமிழ் மக்களின் பாரம்பரியமே அதீத பிரயாசைப்படுபவர்கள் என்று. சிக்கல் நிறைந்த அரசியல் விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கு அதீத பிரயத்தனம் எடுப்பார்கள் என்று. 1910 ம் ஆண்டு சோவியத் யூனியனில் எப்படி பல இயக்கங்கள் தோன்றினவோ அதே மாதிரியே தமிழ் ஈழத்திலும் பல இயக்கங்கள் தோன்றி ஏதோ ஒரு வகையில் போராடுகின்றன. 1912ல் ஜார் அரசன் ருசியர்களை நாடு கடத்தியதால் ருசிய தொழிலாளர் வர்க்கம் எண்ணைக் கணக்கற்ற சர்வதேச தொடர்புகளையும் விதம் விதமான அரசியல் அனுபவங்களையும் பெற்றதோ அதே போன்றே இன்றைய தமிழீழத்தவரும் அணி அணியாக உழைக்கவென்ற பேரிலோ, படிக்கவென்ற பேரிலோ ஐரோப்பாவிற்கும், மத்திய கிழக்கிற்கும் கண்டிராத, கேட்டிராத நாடுகளுக்கும் சென்று சர்வதேச தொடர்புகளையும் அரசியல் அனுபவங்களையும் பெறுகின்றனர். இன்று தமிழீழப் போராட்டமானது தென்னிலங்கையிலே சிங்களத் தொழிலாள வர்க்கத்திடையே தமிழீழத்தை அங்கீகரிக்கும் கட்சிகளைக் கட்டி வளர்க்கும் முனைப்போடும் மூலோபாயத்தோடும் செயற்படத் தொடங்கி விட்டனர் எந்தப் பேருடைய இயக்கமும் ஏறக்தாழ இந்த நிலைப்பாட்டுக்கு வர ஆரம்பித்து விட்டன. இதுதான் சோசலிசப் பிடிப்பின் காலக்குறியாகும். இதுவே விடுதலை புலரும் சைகையும் சமிங்ஞையுமாகும்.

▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼▲▼

சாய்ந்து விட்ட வீரனே!
காய்ந்து விடவில்லை உன் மக்களது வீரம்!
உன் கையிலிருந்து வீழ்ந்த துப்பாக்கியை
உன் காதலி ஏந்திக் கொண்டாள்

- செந்தணல் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறி நாயே
# திரும்பிப் போ!

மனித நாகரிகத்தில்
இரத்தக் கறை படிந்த
அமெரிக்க ஏகாதிபத்தியமே!
உன் கொடிய வெறியால்
வியட் நாம் தேசம்
கந்தக பூமியாய் மாறிப்போனது;
ஆனாலுமங்கே
விடுதலைப் பூ சிவப்பேறிப் பூத்தது!
எல் சல்வடோரில்
ஐம்பதினாயிரம் விடுதலைப் போராளிகளை
உன் ஆயுதக் கொடுங் கரம்
திருகிப் பலியெடுத்தது!
உன் "அமைதிப் படையால்"
ஆயிரக் கணக்கான பெண்களின் கற்பு
அழிக்கப்பட்டது;
ஆனாலும் அங்குன் படைகள் பின்வாங்குகின்றன.
இன்றுன் கழுகுப் பார்வை
ஈழ தேசத்தில் பதிகிறது;
உன் "அமைதிப் படை"
சிறிலங்காவுக்கு விரைகிறது!
திரும்பிப் பார் வியட்நாமை
எண்ணிப் பார் எல்சல்வடோரை
எச்சரிக்கை செய்கின்றோம்!
உன் தோல்விப் புத்தகத்தில்
மற்றொரு அத்தியாயத்தை
ஈழ மக்கள் எழுதி வைப்பார்கள்!
உன் முரட்டு நெஞ்சியில்
சூட்டுக் காயங்களை
ஈழ மக்கள் போட்டு வைப்பார்கள்!
உன் "அமைதிப்படைகளை"

---->

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுத பாணிகளாய்
ஈழப் பெண்கள் எதிர் கொள்வார்கள்!
கற்பைத் தின்னும் உன்
சதை வெறிக்கு
அவர்கள் கல்லறை கட்டுவார்கள்!
மக்களைத் தின்னும் உன்
கொடு வெறிக்கு
ஈழ மக்கள் பாடம் புகட்டுவார்கள்!
அமைதி முக்காடு அணிந்துவரும்
அமெரிக்க ஆதிக்கத்தை அடையாளம் காணுகிறோம்
எச்சரிக்கை செய்கிறோம்
வெறி நாயே திரும்பிப் போ!

- கண்ணம்மா
ஈழ மக்கள் கலை இலக்கிய மன்றம்
நன்றி: செந்தணல்.

தோழர்களே!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பணியின் சிறு துளியாக தன்னை முற்று முழுதாக விடுதலைப் போராட்டத்துக்கே அர்ப்பணித்து வெளிவரும் உங்கள் 'தமிழ் முரசின்' வளர்ச்சிக்குத் தொடர்ந்து ஆதரவளியுங்கள். விடுதலை தொடர்பான ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். அனைத்துக்கும் மேலாக 'தமிழ் முரசை' நெறிப்படுத்துங்கள். சகல தொடர்புகட்கும்....

The Editor,
"TAMIL MURASU"
TAMIL EELAM LIBERATION COUNCIL, (France)
10 rue des Martyrs, 75009 PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தோல்விப் - புத்தகத்தின் புதிய அத்தியாயம் - பெய்ரூத்.



United Press International

ஏகாதிபத்தியத்தைப் பெய்ரூத்திலிருந்து விரட்டியடித்த ட்ரூஸ் மிலிஷ வீரர்கள்.

---

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தோல்விப் புத்தகத்தில் மீண்டும் ஒரு புதிய அத்தியாயம் பெய்ரூத்தில் எழுதப்பட்டிருக்கிறது. உலகின் ஒவ்வொரு மூலையிலும் முதலாளித்துவம் முறிந்து கொட்டுப்படும் நிலைக்கு வந்து விட்டதும் இன உணர்வு மிக்க விடுதலை இயக்கங்களின் போராட்டம் எப்போதும் ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்கும் என்பது இன்னுமொரு முறை தெளிவாக்கப்பட்டிருக்கிறது. லெபனன் இன்னுமொரு கிரெனடா அல்ல என்ற பாடம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குப் புகட்டப்பட்டுடன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் படைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலெபனானிலிருந்து விரட்டியடிக்கவும் பட்டிருக்கின்றன.

இலெபனான் மீதான இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்குத் துணையாக 'அமைதிப் படை' என்ற போர்வையில் பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கவும், மத்திய கிழக்கில் தனது சுரண்டலைத் தொடரவும் சென்ற அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் படைகள் கடந்த 26.2.84 அன்று இலெபனான் மண்ணிலிருந்து முற்றாக விரட்டியடிக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்க இராணுவத்தின் பயிற்சி பெற்ற இலெபனானின் இராணுவத்தினர் கூட இஸ்லாமியத் தீவிரவாதிகளிடம் தோல்வியடைந்துள்ளனர். இது ஓர் வரலாற்றுச் சிறப்புமிகு நிகழ்ச்சியாகும். உலகெங்குமுள்ள தேசவிடுதலை இயக்கங்களை ஏகாதிபத்தியத்துக்கெதிராக கிளர்ந்தெழும்படி முடுக்கிவிடும் நிகழ்வாகும்.

தனது படுதோல்வியை ஜீரணிக்க முடியாத அமெரிக்க ஏகாதிபத்தியம் இலெபனானில் இறுதிநாட்களில் நடத்திய வெறியாட்டம் ஏகாதிபத்தியத்தின் சுயரூபத்தை துகிலுரித்து காட்டுவதாக இருந்தது. தனது கைக்கூலிகளான கிறிஸ்தவ பாலங்கே தீவிரவாதிகளைக் கொண்டு நூற்றுக் கணக்கான பெண்கள், சிறுவர்கள், முதியவர்களைக் கொலை செய்து கிராமங்களின் வீதிகளில் வீசியெறியச் செய்திருந்தது. தனது ஆறாவது கடற்படையின் நியூஜேர்சி போர்க்கப்பலின் 16" பீரங்கிகளை இடைவிடாது இயக்கி ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொலை செய்தும் அவர்களது குடியிருப்புக்களை துவம்சம் செய்தும் வெறியாட்டத்தை நிகழ்த்தியது. எது எப்படியிருப்பினும் தொடர்ச்சியான இந்தத் தோல்விகள் ஏகாதிபத்தியத்தைச் சிதைவுக்குப் போவதை தவிர்க்க முடியாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAMOUL MOUROUSSOU

MURASU-2 MARS-1984 OLY-5

## LE PARTI DE LA LIBERTE DU SRILANKA BOYCOTTE LA LA CONFERENCE DE TOUS LES PARTIS DE SRILANKA

La conférence de tous les partis de Srilanka a été commencé en janvier 1984. Après avoir participé pour quelque jours, le front uni de peuple parti et l'association de buddhist boycottent cette conférence. Le parti de la liberté du Srilanka a participé dans cette conférence jusqu'à la fin de première session. Ce parti a été au pouvoir à Srilanka pour plusieur années et aussi un major parti en Srilanka. Quand la deuxième session de cette conférence était commencé en février 1984, ce parti a commencé à boycotter la conférence. Ils n'ont pas donné aucune raison valable pour boycotter la conférence.

Tandisque le front uni de la liberation de tamoul parti avait demandé ce parti à participer dans la deuxième session, ils ont refusé. Dans cette circonstance, il est très difficile pour resoudre les problèmes de tamouls dans cette conférence. A cause de cela, les tamouls sont contraint pour faire la lutte de la liberation de "Tamoul Eelam".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LES ARMEES PRENNENT REVANCHE CONTRE LES TAMOUL UNIVERSITE ETUDIANTS

Les tamouls étudiants qui suivent leurs cours dans les universités de cingalais région, demandent le gouvernement pour transferer aux universités dans les régions tamouls. Ils boycottent leurs cours depuis la rouverture les universités (après les émutes communalistes en juillet 1983). Le gouvernement n'a pas pris d'action pour transferer tous les tamouls étudiants aux universités dans les régions tamoul.

Le gouvernement dit qu'il n'y a pas de facilités dans les universités de tamouls régions pour transfere tous les tamouls étudiants. Le gouvernement n'a pas pris d'actions à developper les facilités dans ces universités pour plusieur années. Mais le gouvernement avait developpé toutes les facilités dans les universités de cingalais régions. Ces universités sont ouverts même après institué les universités dans les régions tamoul. Les armées arrêtent plusieur étudiants qui demandent le transfert. Les armées donnent raison fausse pour arrêter les étudiants. Ils menacent les étudiants et essayent d'opprimer leur demande.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LE GOUVERNEMENT FERME LES BANQUES DANS LES REGIONS TAMOULS

Plusieur banques dans les régions tamouls ont été fermées par le gouvernement. Il donne la raison qu'il n'y a pas de sécurité dans les régions tamouls. Mais le gouvernement n'a pas pris les mesures pour la sécurité des banques dans ces régions.

Les paysans pauvres de tamoul prêtent l'argent de la banque pour agriculture. Il est très dure pour leur parcequ'il n'y a pas d'argent pour l'agriculture. Le gouvernement essaye de détruire l'economie de tamoul. Les tamouls doivent continuer leur lutte pour le liberation de "Tamoul Eelam" parceque le gouvernement opprime les tamouls dans toutes les manières.

## LES ARMEES DEROBE LES TAMOUL VOYAGEURS

Les tamouls ont voyagé de Jaffna (une ville dans la région tamouls) à Colombo (capitale de Srilanka) par les autobus. Quand ils sont passés par la rue traversé la forêt, les armées qui ont gardé la rue (dans la régions cingalais) avaient les arrêté pour contrôler. Ils ont menacé et attaqué les tamoul voyageurs. Ils ont derobé leurs possessions. Les voyageurs qui ont

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

perdu leur possessions, sont entrés chez eux parcequ'il n'y a aucune sécurité pour leur dans les régions cingalais. Le gouvernement n'a pas pris des mesures contre les armées qui attaquent les tamouls.

## LES ARMEES ATTAQUE LA MOSQUEE

Les armées sont entrés la mosquée à Trincomalee pour fouiller. Ils sont entrés la mosquée parceque les tamouls musulman prient là. Ils n'ont pas respecté la adoration place. Ils ont dérangé leur prière et attaqué les personnes qui était dans la mosquée. Plusieur personnes ont été blessé par les armées. Ils ont cassé les vitrines et les fenêtre. Il est très claire que le gouvernement essaye d'opprimer les tamouls sans respect leur religion.



Un tamoul innocent tué par l'armée

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ☆ மலரப்போகும் தமிழீழம் ○○○○○○○

முதலாளித்துவ, இனவாத அரசாங்கங்களினால் தொடர்ச்சியாக ஆயுதமுனையில் தமிழினம் அடக்கி ஒடுக்கப்படுவதற்கு எதிராக.... தமிழினத்தின் விடுதலைக்காக... பிரதேசப் பாதுகாப்பிற்காக... சமூக - அரசியல் - பொருளாதாரப் புறக்கணிப்புகளுக்கெதிராக.... இன்று பல்வேறுபட்ட தமிழீழ விடுதலை இயக்கங்கள் இயங்கிவருகின்றன. ஆரம்ப காலங்களில் இவ்வியக்கங்கள் மீது இருந்த அபார நம்பிக்கை மக்களுக்கு இவ்வியக்கங்களின் அண்மைக் கால நடவடிக்கைகளால் குறைந்து வருவதாக ஐயம் தோன்றுகிறது.

காரணம் இவ்வியக்கங்களிடையே இன்று பெரிதாக விசுவரூபம் எடுத்திருக்கும் கருத்து முரண்பாடுகள், இயக்க உறுப்பினர்கள் இதர இயக்கத்தவரை வஞ்சம் தீர்க்க முற்படல், உரிமை கோரல் போட்டிகள், பிரசுர-சுவரொட்டித் தாக்குதல்கள், அளவு கடந்த விளம்பரப் பிரியங்கள் போன்ற விரும்பத்தகா நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் வெறுப்பையும், கலக்கத்தையும் ஏற்படுத்தி வருவதை உணரக் கூடியதாய் இருக்கிறது. ஈழ விடுதலை இயக்கங்களிடையே இன்று பெரிதாக வெடித்துக் கிளம்பியிருக்கும் இப் போட்டி பூசல்களும், கருத்து முரண்பாடுகளும் ஈழவிடுதலைப் போராட்டத்தை நோக்கி அணிதிரண்டு கொண்டிருக்கும் பொது ஜனங்களிடையே வெறுப்பை ஏற்படுத்தி போராட்ட உத்வேகத்தை மழுங்கடிப்பதாகவே உள்ளது.

எல்லா இயக்கங்களும் போராடுவதன் நோக்கம் சுதந்திரத் தமிழீழம் என்றால் ஏன் இவை யாவும் ஒரே அணியாகி ஓர் பலம் பொருந்திய விடுதலை இயக்கமாக உருவெடுக்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிக்கிறோம், என் சகோதரர் காட்டும் உதாரணங்களை எமது இயக்கங்களும் பின்பற்றி ஈழவிடுதலைப் போராட்டத்தை நோக்கி உலகின் கவனத்தை ஈர்க்க ஏன் முயலக் கூடாது? தமிழீழவிடுதலை இயக்கங்கள் யாவும் ஏதாவது ஒரு வகையில் ஐக்கியப்பட்டு ஒரு பெருந்த மக்கள் சக்தியாக உருவெடுப்பதன் மூலம் தான் தமிழீழத்தை கைவரவைக்க முடியும்.

இதனை எமது விடுதலை இயக்கங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இயக்கங்கள் ஐக்கியப்பட்டு, மக்களை அணிதிரட்டி போராட்டம் நிகழ்த்துவதன் மூலம் தான் நாம் எந்தவொரு வல்லரசின் துணையுமின்றி சோஷலிச தமிழீழத்தை வென்றெடுக்க முடியும். அந்நிய சக்திகளின் தலையீடுகள் இல்லாத சோஷலிச தமிழீழத்தில் தான் சமூக, பொருளாதார, இன, மத வேறுபாடற்ற சமுதாயம் அமைய முடியும்.

எனவே ஈழவிடுதலை இயக்கங்களே இனிமேல் எங்கள் மக்களுக்காக சிந்தியுங்கள். அவர்களின் எதிர்காலத்தை நோக்குங்கள். அப்போது உங்களுக்குப் புரியும் உங்கள் வேறுபாடுகள் எவ்வளவு சிறியவை என்று. மகத்தான, உங்கள் தியாகங்கள் அவமாகிப் போய்விடக் கூடாது. இன்று வாழ்வின் இறுதிக் கட்டத்தில் நின்று போராடிக் கொண்டிருக்கும் எமது மக்களுக்கு உயிர்கொடுப்பதாய் உங்கள் போராட்டம் அமைய வேண்டும். எனவே கருத்து வேறுபாடுகளை களையுங்கள். ஐக்கியப்படுங்கள். போராட்டத்தை தொடர்வோம். விடுதலையை வென்றெடுப்போம்.

- ஈ. விஜயா் இராசநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோவியத் ஜனாதிபதி அந்திரபோவ் மரணம்! புதிய ஜனாதிபதி செர்னன்கோ!



சோவியத் ஜனாதிபதி திரு. யூரி ஆந்திரபோவ் தமது 70வது வயதில் பெப்ரவரி 9ம் திகதி காலமானார். ஜனாதிபதியை ஏற்ற 15 மாதங்களில் மரணமடைந்த இவர் சிறுநீரகப் பாதிப்புக்காரணமாக கடந்த ஆறு மாதங்களுக்கு மேல் நோய்வாய்ப்பட்டிருந்தார். திரு. ஆந்திரபோவ் குறுகிய காலத்துக்குள் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் தமது செல்வாக்கை வலுப்படுத்திக் கொண்டதுடன் புதிய பொருளாதாரக் கொள்கையின் மூலம் சோவியத் பொருளாதாரத்தில் வளர்ச்சியையும் ஏற்படுத்தினர். இவரது இறுதிச் சடங்குகளில் உலகத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டார்.



திரு. ஆந்திரபோவின் இடத்துக்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய செயலாளராக 72 வயதுடைய திரு. கொன்ஸ்டன்டைன் செர்னென்கோ தெரிவு செய்யப்பட்டுள்ளார். கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்டகால உறுப்பினரான இவர் காலம் சென்ற ஜனாதிபதி பிரஸ்னேவின் நெருங்கிய ஆதரவாளருமாகும். மேற்படி பதவி ஏற்ற இவர் ஆந்திரபோவின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள வந்த தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். இவர் இந்திரா காந்தியுடனும், யசீர் அரபாத்துடனும் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளுக்கு சோவியத் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துள்ளன. அதே வேளையில் மேற்படி திரு. செர்னென்கோவை சந்திக்க முயன்ற பாக்கிஸ்தான் ஜனாதிபதி ஜியா உல் ஹக்கின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சு

## ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவிடமிருந்து விலகுகின்றன.

ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்து வரும் மக்களின் எதிர்ப்பு மேற்படி நாடுகளின் அரசுகளை அமெரிக்க ஏகாதிபத்தியத்திலிருந்து விலகச் செய்ய ஆரம்பித்துள்ளன. இந்தவகையில் பிரான்சு, பிரித்தானியா, மேற்கு ஜேர்மனி உட்பட ஏழு நாடுகள் ஐரோப்பிய சுயாதீனத்தை அதிகரித்து, அமெரிக்க ஆளுமையைக் குறைக்கும் வகையில் எதிர்காலத்தில் இராணுவ மற்றும் இதர செயற்பாடுகளை மேற்கொள்ள விரும்புவதாக அறிவித்துள்ளன. இதற்கான முக்கிய செயற்பாடுகளை

## அரசின் கல்விக் கொள்கைக்கு எதிராக பெரும் எதிர்ப்பு ஊர்வலங்கள்.

தனியார் கல்லூரிகளின் மீது குறிப்பாக கத்தோலிக்க மத ஸ்தாபனக் கல்லூரிகளின் மீது அரச அதிக அதிகாரத்தைப் பிரயோகிக்க வழிசெய்யும் சோசலிச அரசின் சட்டமூலத்துக்கு எதிராக நாட்டின் பல நகர்களிலும் பெரும் எதிர்ப்பு ஊர்வலங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமீபத்தில் 'லில்' நகரில் மேற்கொள்ளப்பட்ட ஊர்வலத்தில் ஏறத்தாழ 2 இலட்சத்து 30 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். இதுபோல போர்தோ, நாந், லியோன், றென் ஆகிய நகர்களில் நடைபெற்ற ஊர்வலங்களில் 7 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அதே வேளையில் சோசலிச அரசு தனது 81ம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்களித்ததற்கு இணங்க மேற்படி சட்டமூலத்தை நிறைவேற்றுவதை தாமதப்படுத்துவதைக் கண்டித்தும் அதற்கெதிராக ஊர்வலங்கள் மேற்கொள்ளப் போவதாகவும் பல இயக்கங்கள் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலெபனான்

## அமைச்சரவை இராஜினாமா! ஆயுதப்படைகள் போரிட மறுப்பு! ஜனாதிபதி பரிதவிப்பு!

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையான இலெபனான் ஜனாதிபதி அமின் ஜெமாயலின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. மேற்படி ஜனாதிபதிக்கெதிராகவும் இஸ்ரேலிய - அமெரிக்க ஆதிக்கத்திற்கெதிராகவும் போராடி வரும் ட்ரூஸ் மற்றும் சியா இஸ்லாமிய தீவிரவாதிகளின் வேண்டுகோளை ஏற்று இலெபனானின் அமைச்சரவை இராஜினாமாச் செய்துள்ளது. மேற்படி வேண்டுகோளை ஏற்று இலெபனான் இராணுவத்தைச் சேர்ந்த 8000க்கும் மேற்பட்ட இஸ்லாமிய வீரர்கள் தீவிரவாதிகளுக்கெதிராகப் போரிட மறுத்ததுடன் மேற்படி இராணுவத்தினரையும் தீவிரவாதிகளுடன் சேர்ந்து அரசுக்கெதிரான போராட்டத்தில் ஈடுபடத்தூண்டியுள்ளது. இதன் விளைவாக அரசு பலமிழந்ததுடன் அதற்கு முண்டு கொடுத்த ஆக்கிரமிப்புப்படைகள் பெய்ரூத்திலிருந்து வெளியேற்றப்பட்டதுடன் நகரின் பெரும்பாகம் இஸ்லாமிய தீவிரவாதிகளின் அதிகாரத்திற்கு வந்துள்ளது.

## ஆக்கிரமிப்பு இஸ்ரேல் படிக்கும் புதிய பாடம்!

சுற்றியிருந்த நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் துணையுடன் ஆக்கிரமிப்பை மேற்கொண்டு அந்த மமதையில் திளைத்திருந்த இஸ்ரேலுக்கு 82ம் ஆண்டின் இலெபனான் ஆக்கிரமிப்பு புதிய பாடத்தைக் கொடுத்துள்ளது. தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் இஸ்ரேலிய வீரர்களின் உயிரிழப்புகள் (3,808 - 82 இலிருந்து இதுவரை) இஸ்ரேலிய மக்களுக்கு அரசின் மீது பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளன. சமீபத்தில் ஜெருசலத்தில் நடந்த சமாதான ஊர்வலத்தில் 40,000 பேர் கலந்துகொண்டு இலெபனானிலிருந்து இஸ்ரேலியப்படைகளை மீளப்பெறுமாறு வற்புறுத்தியதுடன் அரசின் ஆக்கிரமிப்புக் கொள்கையை வன்மையாக சாடியுள்ளனர். இவ்வூர்வலத்தில் கலந்தவர்களின் தொகை கடந்த ஆண்டைப் போல 20மடங்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய இராஜதந்திரி இங்கிலாந்தில் கொலை!

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமிலுள்ள இந்தியத்தூதரகத்தில் பணியாற்றிய உயர் அதிகாரியான 48 வயதுடைய ஆர்.எச். மத்ரே என்னும் இராஜதந்திரி 'காஷ்மீர் விடுதலைச் சேனை' என்றழைக்கப்படும் கூட்டத்தினரால் கடத்தப்பட்டு, சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். காஷ்மீர் இந்திய ஆட்சியிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டுமென்ற கொள்கையுடைய இவர்கள் மேற்படி இராஜதந்திரியை விடுதலை செய்வதாயின் காஷ்மீரில் சிறை வைக்கப்பட்டுள்ள 7 கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் 10 இலட்சம் ஸ்டேர்லிங் பவுண் பணயப்பணமாகத் தரப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரியிருந்தனர். இச்சம்பவத்திற்கு பாகிஸ்தான் அரசாங்கம் உடந்தையாயிருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இச்சம்பவத்தையடுத்து உலகம் முழுவதிலுமுள்ள இந்தியத் தூதர'

## இந்தியாவில் தூக்கிலிடப்பட்டவர் 'சுதந்திர வீரர்' என பாக். ஜனாதிபதி புகழாரம்.

இரண்டு கொலைக் குற்றங்கள் தொடர்பாகவும், பாகிஸ்தானுக்கு உளவு பார்த்ததற்காகவும் மரணதண்டனை விதிக்கப்பட்டு இந்திய அரசினால் புதுடில்லி 'திஹார்' சிறையில் தூக்கிலிடப்பட்ட காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் மக்பூல் பட் மாவீரரும் சுதந்திர வீரர் என பாகிஸ்தான் ஜனாதிபதி ஜியா உல் ஹக் புகழாரம் சூட்டியுள்ளார்.

காஷ்மீர் விடுதலை முன்னணி, பாகிஸ்தான் கிளர்ச்சியாளர்கள், சீக்கிய தீவிரவாதிகள் போன்றவர்களுக்கு ஆதரவளித்து அதன் மூலம் இந்தியாவில் கலவரங்களைத் தூண்டிவிட்டு இந்திய அரசை பலவீனப்படுத்திவிட்டு போர் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளிலும், ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளிலும் பாகிஸ்தானின் இராணுவ அரசு சமீபகாலத்தில் ஈடுபட்டுள்ளது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ விடுதலை இதழ்களிலிருந்து........

## தொடர்ந்து போராடுவோம்.

"....அன்புத் தோழர்களே! மன உறுதியோடும், நம்பிக்கையோடும் உங்கள் கடமைகளை நீங்கள் தீவிரமாகவும், நிதானமாகவும் செய்து கொண்டிருங்கள். கதாநாயகர்கள் போல் சிலரை இந்தியாவின் ஆக்க முற்படுவதைக் கண்டு நீங்கள் அஞ்சத் தேவையில்லை.

1977ம் ஆண்டு சிறீலங்கா நாடாளுமன்றத்தின் பொதுத் தேர்தலின் போது கூட்டணி வேட்பாளர்களுக்கு விழுந்த மாலைகள் எங்கே? இரத்தப் பொட்டுக்கள் எங்கே? வாண வேடிக்கைகள் எங்கே? கதாநாயகர்கள் போல் அவர்கள் அன்று இருக்கவில்லையா? ஈழப்போரின் தளபதிகள் என்று மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்கள் அல்லவா? போராட்டம் முனைப் படைந்திருக்கும் இந்த வேளையில் அவர்கள் எங்கே போய் விட்டார்கள்? ஆமாம், அவர்கள் தமிழ் நாட்டின் அரசு விடுதிகளில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். தமிழ் நாட்டில் சென்ற இடங்களிலெல்லாம் திட்டுக்களையே அவர்கள் எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். விலகிப் போய்விடுங்கள் என்று அவர்கள் முகத்தில் பலர் காறி உமிழ்ந்து துப்பியும் விட்டார்கள்....."

– செந்தளம் –

## வேர்கள் விளம்பரத்திற்கு விரும்பினால் விருட்சம் நிற்குமா?

"....உண்மையில் பகிரங்க அரசியல்வாதிகளைவிடவும், அந்தரங்க விடுதலைப் போராளிகளே போற்றுதலுக்கு மட்டுமல்ல வணக்கத்துக்குமுரியவர்களாவர். காரணம் அவர்கள் தாம் செய்கின்ற தியாகத்திற்கான விளம்பரத்தைக்கூட தம் காலத்தில் தியாகம் செய்து விடுபவர்களாகும். எதிர்காலத்திலும் அவர்கள் செய்த தியாகம் போற்றப்படும் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. ஆனால் அவர்களும் பகிரங்க அரசியல் விடுதலைவாதிகளைப் போல அன்றாட விளம்பரத்துக்கு ஆசைப்பட்டால், எல்லாமே பாழாகிவிடும். ஆம்; மண்ணுக்குள் தரித்து நிற்க வேண்டிய வேர்கள் வெளியேறி விளம்பரப்படுத்திக் கொள்ள முற்பட்டால் மரம் நிற்க முடியுமா? விளைச்சல் தான் கிட்டுமா...."

– எழுகதிர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரவையின் சிறு பணிகள்.

**Foreign and Commonwealth Office**
London SW1A 2AH

Telephone 01- 233 5887

The General Secretary
Tamil Eelam Liberation Council (France)
10 rue des Martyrs
75009 PARIS
France

Your reference

Our reference

Date 31 January 1984

Dear Sir,

Thank you for your letter of 4 January to the Prime Minister about the intercommunal problems in Sri Lanka, which has been passed to me for reply.

We share the Council's concern at the situation in Sri Lanka and deplore the incidents of violence which have occurred there. In the immediate aftermath of the riots in August, a demarche was made to the Government of Sri Lanka on behalf of the ten countries of the European Community to express the hope that the Sri Lankan Government would safeguard the fundamental rights of the individual in all circumstances. Although the situation now seems calm, tensions remain and there is always the possibility of further violence.

We have therefore taken the opportunity to express to the Sri Lankan Government our hope that the intercommunal problems can be solved peacefully and democratically. We believe that a policy of reconciliation between the Tamil and Sinhalese communities should have Britain's support and sympathy. We would like to see a resumption of the dialogue between the Government and Tamil leaders, and welcome the all-party conference in Colombo, which is currently meeting to discuss a number of proposals designed to resolve political differences. A peaceful settlement would undoubtedly lessen the possibility of human rights abuses and we will do what we can to help bring this about.

Although there is still clearly a long way to go, this seems an encouraging development. We hope that further progress can be made towards a settlement acceptable to all sides, and we shall continue to give our support for a policy of reconciliation.

Yours faithfully

J L Thompson (Miss)
South Asian Department

ESTADOS UNIDOS MEXICANOS
PRESIDENCIA DE LA REPUBLICA
SECRETARIA PARTICULAR

C. LICENCIADO
MANUEL RODRIGUEZ A...
Secretario Partic...
C. Secretario de...
Presente.

Me permito remit...
tas oficinas e...
d...
dos Unidos ...
mexicano, ...
en Sri ...
Sin ...
mi ...

Ger...
Tam...
10 ...
7500...
Fran...

I have ...
to ackn...
recent vi...

Yours sinc...

... Private Secr...
to the Taoise...

# UN Aide Opens Human Rights Session With an Appeal for Action on Torture

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REPUBLICA DE COLOMBIA
MINISTERIO DE RELACIONES EXTERIORES

CORREO AEREO

OI. 00235

Bogotá, D.E., Enero 25 de 1.984

Señor
Secretario General
Consejo de Liberación TAMIL EELAN
10, Rue des Martys, 75009
París.

Señor Secretario General :

Me refiero a su atenta comunicación del 6 de enero del año en curso, con la cual ese Consejo tuvo a bien so... ...justicia a nivel internacional, por razones huma... ...echos Humanos regis...

...mos informarle que se ...sentado por ustedes y se ...icipará en el 40º período ...umanos, en el sentido de ...

---

4283

...1.2/4
...E. 63725
...alacio Nacional, 6 de febrero d...

...RIAGA
...lar del
...laciones Exteriores

...rle para su atención, escr...
...ro del año en cur...
...ente Cons...
...it

---

Oifig an Taoisigh
Office of the Taoiseach

...January 1984

...eral Secretary
...illelam Liberation Council
...ue de Martyres
...9 Paris
...ce

...been asked by the Taoiseach, Dr Ga...
...wledge receipt of your letter on t...
...olence in Sri Lanka.

...erely

...etary
...ach

...fig an Taoisigh, Tithe an Rialtais, Baile Átha Cliath 2
...ice of the Taoiseach, Government Buildings, Dublin 2

---

PRESIDENTE DE LA REPUBLICA
COSTA RICA

17 de enero de 1984

Señor
Secretario General
Tamil Eelam Liberation Council
10 rue des Martyrs, 75009
París

Estimado señor:

Acuso recibo de su estimable carta, de fecha 9 de enero de 1984, dirigida al señor Presidente de la República, en la cual solicita a nuestro Gobierno apoyar la denuncia de violación de los derechos humanos en Sri Lanka en la Sesión de la Comisión de Derechos Humanos de la Organización de las Naciones Unidas, que se celebrará el próximo mes.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாபிரிக்க இனவாத அரசை எப்படி உலகின் நாகரிக சமூகம் முழுவதும் நிராகரித்ததோ அதே போல தமிழ் மக்களை அடக்கி... ஒடுக்கி... நிர்மூல மாக்க முயற்சித்துவரும் இனவாத சிறீலங்கா அரசின் சுயரூபத்தை உலக அரங்கில் அம்பலமாக்கி நாகரிக சமுதாயம் முழுவதனையும் சிறீலங்கா அரசை பகிஷ்கரித்து, நிராகரிக்கச் செய்ய வேண்டியது வெளிநாடுகளில் இயங்கிவரும் தமிழீழ விடுதலை இயக்கங்களின் நியாய கடமையாகும்.

இந்த வகையில் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி ஜெனிவாவில் கூடிய ஐ.நா. மனித உரிமைகள் பிரிவின் உபகுழு தனது 36வது பருவ ஆய்வில் 6வது நிகழ்ச்சியாக சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை விசாரணை செய்து கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றியதையும் இத்தீர்மானம் நிறைவேறுவதற்கு மேற்படி ஆய்வில் கலந்து கொண்ட பிரதிநிதிகளிடம் பேரவையினால் இலங்கையிலிருந்து அழைக்கப்பட்ட பிரதிநிதி மேற்கொண்ட தீவிர பிரச்சாரமும் முக்கிய காரணமாக இருந்ததையும் குறிப்பிட்டிருந்தோம். இப் பிரச்சாரம் சிறீலங்கா பாராளுமன்றத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பான கேள்வி நேரம் வெளிவிவகார அமைச்சர் ஹமீதிடம் எழுப்பிய அத்தனகல பா.உ. லக்ஷ்மன் ஜெயக்கொடி தனது கேள்வியில் 'அரசின் பிரச்சாரத்தையும் மீறி இந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேறக் காரணமாக பின்னணியில் இருந்தது யார்?' எனக் கேட்டிருந்தார்.
(ஆதாரம்: வீரகேசரி)

மேற்குறிப்பிட்ட விபரங்களை நாம் ஏற்கனவே தமிழ் முரசு - கார்த்திகை-83 இதழில் வெளியிட்டிருந்ததுடன் இத்தீர்மானத்துடன் பேரவையின் பணிகள் ஓய்ந்து விட மாட்டாது. இத்தகைய கண்டனத் தீர்மானத்தை மேற்படி மனித உரிமைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிவின் தலைமைக்குழுவிலும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை பேரவை எடுக்கும் என உறுதி கூறியிருந்தது. அந்த உறுதிமொழிக்கேற்ப நாம் எடுத்த முயற்சிகள் .......

பெப்ரவரி 6ம் திகதி தொடக்கம் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைப்பிரிவின் தலைமைக் குழுவின் கூட்டத்தொடர் இம்முறை அரசுகளின் மனித உரிமை மீறல்களையும், சித்திரவதைதை, சிறைவைப்புக்களையும் ஆராய்கிறது. 43 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இம்முறைக் கூட்டத்தொடர் சிறீலங்கா, ஆப்கானிஸ்தான், சிலி, கௌதமாலா ஆகிய நாட்டு அரசுகளின் மனித உரிமை மீறல்களை விசேடமாக ஆராய்கிறது. இந்த வகையில் மேற்படி தொடரில் கலந்து கொள்ளும் 43 நாடுகளின் தலைவர்களுக்கும் பேரவை ஏற்கனவே இலங்கையில் சிறீலங்கா அரசு காலகாலமாக இழைத்துவரும் இன்னல்களையும், அரசின் மனித உரிமை மீறல்களை அறிக்கை மூலம் விளக்கியதுடன் மேற்படி சிறீலங்கா அரசுக்கெதிராக கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியத்தையும் விளக்கி, வேண்டியிருந்தது.

மேற்படி பேரவை அனுப்பிய அறிக்கைகள் குறிப்பிட்ட நாட்டுத் தலைவர்களால் கூட்டத் தொடரில் பங்குபற்றும் பிரதிநிதிகளுக்கு அனுப்பப்பட்டு மிகுந்த கவனத்துடன் பரிசீலிக்கப்படுவதாகவும், தமிழ்மக்கள் தொடர்பான நிலையும் பேரவையின் வேண்டுகோளையும் தாங்கள் மிகுந்த அநுதாபத்துடன் அணுகுவதாகவும் இங்கிலாந்து, மேற்கு ஜேர்மனி, செக்கோசிலவாக்கியா, மெக்ஸிக்கோ, கொஸ்ராறிக்கா, கொ ம்பியா ஆகிய நாடுகளின் ஜனாதிபதி அலுவலகங்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சுக்கள் கடிதங்கள் மூலம் பேரவைக்கு அறியத் தந்துள்ளன. பேரவையின இச் சிறு பணிகள் உலக அரங்கில் சிறீலங்கா அரசை அம்பலப்படுத்த [illegible]ம் என எண்ணுகிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிணம் தின்னிப் பறவைகள்.

பிணம் தின்னிப் பறவைகள் நாம்
பறக்கின்றோம் உணவு தேடி.
எங்கெல்லாம் படுகொலையோ
அங்கெல்லாம் எமக்கு பெருவிருந்து.
அடிமைகளாய் வாழும் மனித இனத்தின்
விடுதலைக் குரல் கேட்டால்
விரைந்திடுவோம் அவ்விடத்தில்.
பாலஸ்தீனம் சென்றோம்
பல்லாயிரம் மனித பிணம்
பசிதீர உண்டோம்..
பறக்கின்றோம் மீண்டும்....
விடுதலை கேட்ட
தமிழ் ஈழ மக்களுக்கு
தார்மீகம் தருகின்ற பரிசு
தலை வேறு கால் வேறாய்
உடல் வேறு குடல் வேறாய்
துண்டுகளாய் வெட்டி
வீசுகிறார் வீதியிலே – எமக்கோ
பூமியிலே இதுபோல
இலகுவாய் உண்பதற்கு
வசதியாய் வாய்த்ததில்லை
இதுவரை காலத்திலே.....

– தேவதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேய் ஆட்சி செய்தால்
# பிணம் தின்னும் சாத்திரங்கள்.

பேய் ஆட்சி செய்யும் பூமியிலே சட்டம், நீதி எதற்குமே இடம் கிடையாது. அங்கே அந்தப் பேயைப் போலவே சட்டம், நீதி ஆகியனவும் பிணங்களைத் தின்னும். அந்த நிலைதான் இன்று இலங்கையிலும் ஏற்பட்டிருக்கிறது. தார்மீகப் போர்வையைப் போர்த்திருக்கும் ஜெயவர்த்தனவின் இனவாத அரசும் அதனது சட்டங்களும் இன்று நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்களைக் கைது செய்து கொடும் சித்திரவதை கட்கு உள்ளாக்கி வருகின்றன. அது மாத்திரமல்ல தமிழ் மக்கள் மீது புதிய படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டு அவர்களை அழிக்கும் நோக்குடன் ஏராளமான நவீன ரக ஆயுதங்களையும் ஆக்கிரமிப்பு அரசு இறக்குமதி செய்து வருகிறது. இந்த வகையில் பிரித்தானியாவிலுள்ள நிறுவனம் ஒன்றில் பெருமளவு கவச வாகனங்களையும், இதர ஆயுதங்களையும் கொள்வனவு செய்துள்ளது.

அரசபடையின் அட்டகாசங்கள், அத்துமீறல்கள், கொடும் சித்திரவதைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. இதோ அந்தக் கொடுமைத் துளிகளில் சில.....

- 15.1.84 பொங்கல் தினத்தன்று வவுனியா - பாவற்குளத்தில் வெறியாட்டம் நிகழ்த்திய இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்கள் பலரைத் தாக்கி அவர்களது வீடுகளையும் சேதப் படுத்தியுள்ளார்கள்.

- 24.1.84 இல் காத்தான்குடி ஆரையம்பதியைச் சேர்ந்த சத்தியசீலன் (33 வயது) சுட்டுக் கொல்லப் பட்டிருக்கிறார். இவரது மோட்டார் வாகனம் பொலிஸாரால் மட்டுநகர் சிறைமீட்பு தொடர்பாக பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 3 இளம் பெண்கள் கைது செய்யப்பட்டு தாளையடி இராணுவ முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களில் மாத்திரம் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளைச் சேர்ந்த 240க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள் எக்காரணமுமின்றிக் கைது செய்யப்பட்டு கடும் சித்திரவதைக்குள்ளாகி வருகின்றனர். வவுனியாப் பகுதியில் மாத்திரம் 65 பேருக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞர்கள் சிலரது பெயர் விபரங்கள் .....

## மட்டக்களப்பு.

1) வைத்திலிங்கம் (சந்திவெளி)
2) சலீம். (ஏறாவூர்)
3) சந்திரா பௌழக்ற்.
4) எஸ். தயாநிதி
5) வி. சிறிலஷ்மன். (முகத்துவாரம்.)
6) ஜோன் கணேசமூர்த்தி. (மாமாங்கம்.)
7) ராசா ராஜேந்திரன். (செங்கலடி)
8) ராச நாயகம். (செங்கலடி)
9) சுபைர்.
10) இஸ்மாயில். (வாழைச் சேனை.)
11) எஸ். மயில்வாகனம்.
12) கோபாலகிருஷ்ணன். (தொழில்நுட்ப அலுவலர்)
13) செல்வேந்திரன்
14) சிறீபத்மநாதன் யூட்.
15) ஜோர் டீன்.
16) இந்திரஜோதி.
17) சதாபூவன் சிவலிங்கம். (மட்டுநகர் பல்கலைக்கழகம்.)
18) பிரேம்குமார்.
19) டேவிட் யோகேந்திரன்
20) ஜோனால்.
21) ரட்ணராஜா.
22) மகாலிங்கம். (பேராதீவு)
23) அழகக்கோன். (செங்கலடி)
24) சிறீபத்மன்.
25) பிராங்ளின் சாண்டோஸ்.
26) சுமந்திரன்.
27) பதுர்டீன்.
28) சந்திரசேகர் தயாநிதி.
29) உதய ரஞ்சன்.
30) சாலிட் அலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31) நடராசா (வாழைச்சேனை)

32) முருக மூர்த்தி.

33) சுந்தரலிங்கம்.

34) இரத்தினம்.

35) தேவராசா.

36) பி. நடேசானந்தம்.

37) நாகமுத்து தியாகராசா.

## திருகோணமலை.

37) கனகசபை. (நிலாவெளி)

38) நமசிவாயம் பத்மநாதன். (மேலதிக அரசாங்க அதிபர்.)

39) வி. தியாகலிங்கம்.

40) மணியம்.

## வவுனியா.

41) சண்முகலிங்கம் (காந்தீயம்.)

42) கே. செல்வஜோதி.

43) எஸ். நாகலிங்கம்.

44) எஸ். ராமகிருஷ்ணன்.

45) விஜயன்.

46) அம்பலம் மயில்வாகனம்.

47) அருளானந்தம்.

48) வன்னியசிங்கம்.

49) புஷ்பராஜா.

50) கருணாகரன்.

51) கோபி நல்லையா (60 வயது)

52) தனபாலசிங்கம். (5 பிள்ளைகளின் தந்தை)

53) கே. தேவலிங்கம். (பொறியியற் பீட 2ம் வருட மாணவன்.)

## யாழ்ப்பாணம்.

54) சுப்பிரமணியம் தயானந்தன். (கரவெட்டி)

55) தமிழ் மாறன். (கரவெட்டி)

56) ஞானசீலன். (அச்சுவேலி)

57) ஆர். ஞானராஜா.

58) கனகலிங்கம் சுலோசனா. (21, ஆஸ்பத்திரி வீதி)

59) வேலாயுதம் வேல்ரஞ்சன். (கோப்பாய்)

## மஸ்கெலியா.

60) மரியாம்பிள்ளை பரமேஸ்வரன்.

61) கையன் செம்புலிங்கம்.

62) கந்தசாமி முருகையா.

## ஹட்டன்

63) கிருஷ்ண மூர்த்தி.

## தலவாக்கொல.

64) செல்வராஜா சதாசிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத் தீவு.

65) ராசம்பு சூசைதாசன்
(21 வயது)

66) சுந்தரராசசிங்கம்.
(23 வயது)

67) செபஸ்தியாம்பிள்ளை.
(21 வயது)

68) கிறிஸ்து ராசா. (19 வயது)

69) சூசைப்பிள்ளை அருள்.
(17 வயது)

70) சின்னத்துரை

71) தேவலிங்கம்.

72) சற்தேவலிங்கம்.

73) K. தேவலிங்கம்.
(மா[illegible])

## மன்னார்.

74) சிவபாதம்.
(அரச அதிகாரி)

75) ராஜேஸ்வரன்.
(நிர்வாக அதிகாரி)

76) றெசந்தி.

77) மதுகுமார்.

78) சுப்ரமணியம் தயானந்தம்.

79) அன்ரன் அலோசியஸ் ஞானசேகரம். (தகப்பன்.)

80) ஜோசப் தாமரைச்செல்வன் ஞானசேகரம். (மகன்)

தெரிந்த விபரங்கள் இவை. எந்த விபரமும் தெரியாமல் காரணம் எதுவுமின்றி கைது செய்யப்பட்டு ஆக்கிரமிப்புப் படையினரின் கொடும் சித்திரவதைகளுக்கு உள்ளாகி சிறிலங்காவின் வதைமுகாம்களில் வாடும் எம்மினத்தோர்களின் ஏக்கம் தமிழீழம் வென்றிடல் மட்டுமே தீரும்.

---

"ஒரு கன்னத்தில் அறையும் எந்தக் கையும் மறு கன்னத்தில் அறையும் சந்தர்ப்பமின்றி, அந்தக் கணமே அறுத்தெறியப்பட வேண்டும்!"

– இன்குலாப்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ வெற்றிவரை போராடுவோம்!



ஏகாதிபத்தியத்தின்
நாசக் கரங்கள்
எமது
பாச பூமியை
பற்றிப் படர முன்னர்
அமெரிக்க ஏகாதிபத்தியத்தை
அடித்து விரட்டுவோம்!
வியட்நாமின் செங்கொடியை
மீண்டும் நினைவூட்டும்
ஆதிக்கத்துக்கும்
ஆக்கிரமிப்புக்கும்
எதிராக
அனைவரும் இணைந்திடுவோம்!
வெற்றிவரை போராடுவோம்!
விடுதலையை வென்றெடுப்போம்!

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு

தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org